ஆண்டு பட்டிகை வழக்கு எண்.92/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 92/2024 LW- 5 PW- 4

| | |
|---|---|
| Name | : பாண்டி (பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : வீரமணி |
| Village | : அம்மன்குளம் |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 48/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of May 2025

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து உணவகம் வைத்து நடத்தி வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 1 1/2 வருடத்திற்கு முன்பு மாலை சுமார் 6.00 அல்லது 7.00 மணியளவில் நான் எனது கடை சுபஸ்ரீ உணவகத்தில் இருந்தபோது, நத்தம் காவல் நிலைய போலீசார் அங்கு வந்து விபத்து நடந்த பகுதியான சம்பவ இடத்தை என் முன்னிலையிலும், என்னுடன் சேர்ந்து கலிபுல்லா என்பவர் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சியாக இருக்க கேட்டதன் அடிப்படையில் பார்வை மகஜரில் கையொப்பம் செய்து கொடுத்தேன். **(பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

2. எனக்கு படிக்கத் தெரியும். போலீசார் என்னை விசாரித்தபோது கூலி வேலை செய்ததாக சொன்னேனா என்றால் இல்லை. ே ஹாட்டல் வைத்துதான் நடத்தி வருகிறேன். சுபஸ்ரீ ஹோட்டல் நடத்தி வருவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யாத காரணத்தால் மேற்படி ஹோட்டலை நான் நடத்தி வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அணிந்திருந்த சீருடையை வைத்து காவலர்கள்தான் வந்தார்கள் என்றும், சப் இன்ஸ்பெக்டர் சீருடை குறித்து தெரியாது என்றும் சாட்சி தெரிவிக்கிறார். போலீசார் எத்தனை மணி நேரம் அங்கு செலவழித்தார்கள் என்றால் ஒரு மணி நேரம் இருக்கும், அப்போது சாதாரண மழை பெய்து கொண்டிருந்தது. தீபாவளி சமயமாக இருந்தது. ஏற்கனவே நீதிமன்றத்தில் இதே போன்ற விபத்து வழக்கிற்காக சாட்சியம் அளித்துள்ளேன்.

3. பார்வை மகஜருடன் வரைபடம் வரைந்தார்களா என்றால் ஆமாம். வரைபடத்தில் என்னுடைய கையொப்பம் கிடையாது என்றால் சரிதான். வரைபடத்தை நான் பார்த்தேனா என்றால் இல்லை. வரைபடத்தை சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றாலும், அதனால்தான் நான் பார்க்கவில்லை என்றாலும் சரிதான். சம்பவ இடத்தை புகைப்படம் எடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சாலையின் இருபுறத்திலும் தெரு விளக்குகள் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடம் திண்டுக்கல் – காரைக்குடி ரோடு என்றால் சரிதான். இருபுறங்களும் சகலமாக கிழக்கும், மேற்கும் வாகனங்கள் சென்று வருமாறு அகலமான சாலையாக உள்ளது என்றால் சரிதான்.

4. மேற்படி சாலையானது அம்மன் குளத்திற்கு தெற்கே வளைவாகவும், சம்பவ இடத்திற்கு கிழமேல் நேராகவும் உள்ளது என்றால் சரிதான். அம்மன்குள பகுதியானது தாழ்வாகவும், சம்பவ இடமானது உயரமாகவும் இருக்கும் என்றால்

சரிதான். மேற்படி சாலையானது மாலை நேரங்களில் அதிகமான போக்குவரத்து உள்ள சாலை என்றால் சரிதான். வாகனத்தின் ஒளி விளக்கு காரணமாக இரவு நேரங்களில் சாலையில் வேகமாக செல்ல முடியாது என்றால் சரிதான். சம்பவ தேதியன்று மழை பெய்தது என்றால் சரிதான். அதனால் இருசக்கர வாகனங்களில் செல்பவர்கள் வேகமாக செல்ல முடியாது என்றால் சரிதான். பாதசாரிகள் நடந்து செல்வதற்கு ரோட்டின் வலது பக்கத்திலிருந்து தெற்கே செல்வதற்கும், ரோட்டின் இடது பக்கத்திலிருந்து வடக்கே செல்வதற்கும் எச்சரிக்கை பலகை இல்லை என்றால் சரிதான்.

5. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன் என்றாலும், சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.05.16 14:50:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.92/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 92/2024 LW- 6 PW- 5

| | |
|---|---|
| Name | : **கலிபுல்லா (பார்வை மகஜர் சாட்சி)** |
| Father's/Husband's Name | : **ஷேக் மைதீன்** |
| Village | : **ஆசாத் நகர்** |
| Taluk | : **நத்தம்** |
| District | : **திண்டுக்கல்** |
| Age | : 40/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of May 2025

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து பலசரக்கு கடை வைத்து நடத்தி வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 1 வருடத்திற்கு முன்பு பகல் சுமார் 12.00 மணியளவில் நான் எனது பல சரக்கு கடையான நியூ பாக்கியம் ஸ்டோரில் இருந்தபோது, நத்தம் காவல் நிலைய போலீசார் அங்கு வந்து விபத்து நடந்த பகுதியான சம்பவ இடத்தை என் முன்னிலையில் பார்வையிட்டு படம் வரைந்து கையொப்பம் வாங்கினார்கள். சாட்சியாக இருக்க கேட்டதன் அடிப்படையில் பார்வை மகஜரில் கையொப்பம் செய்து கொடுத்தேன். **(பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

2. மாதிரி வரைபடத்தில் என்னுடைய கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நான் இதற்கு முன்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன். எனக்கு காவலருக்கும், சார்பு ஆய்வாளருக்கும் உள்ள வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். சம்பவ இடத்திற்கு சம்பவம் நடந்த மறுநாள் காலையில் 2 போலீசார் 11.00 – 12.00 மணியளவில் வந்தார்கள். சார்பு ஆய்வாளர் வந்தாரா என்று சரியாக தெரியவில்லை. மேற்படி கால நேரமானது எனக்கு வியாபார நேரம் என்பதால் என்னால் சரியாக சொல்ல முடிகிறது என்றால் சரிதான். செல்லம்மாள் வீட்டிற்கு மேல்புறம் எனது கடை உள்ளது என்றால் யூசுப் மாங்காய் குடோனுக்கு அடுத்து எனது கடை உள்ளது. சம்பவ சமயம் கன மழை இருந்தது. அப்போது நான் 108 ஆம்புலன்ஸ் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது செல்லம்மாளை 108 ஆம்புலன்சில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். சம்பவத்தை நான் பார்க்கவில்லை.

3. கன மழை என்பதால் இருசக்கர வாகனத்தில் செல்பவர்கள் வேகமாக வண்டியை ஓட்ட முடியாது என்றால் சரிதான். மேற்படி மழையில் சாதாரண வேகத்தில் செல்வதே சிரமம் என்றால் சரிதான். சாய்ந்தரம் 6.00 மணியிலிருந்து தூரலாக இருந்து 8.00 மணிக்கு மேல் கனமழையாக சுமார் ஒரு மணி நேரம் பெய்தது. போலீசார் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும் சம்பவ இடத்தை முன்கூட்டியே பார்வையிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜரில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றாலும், என் முன்னிலையில் ஆவணங்கள் எதுவும் தயார் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.05.16 14:51:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்